## துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் -2021

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II இன் பிரிவு 2.09 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. செயற்திட்டமானது துறைமுகம் மற்றும் முன்மொழியப்பட்ட பால்நிலை போக்குவரத்து மையத்தினூடாக புதிய களனி பாலம் தொடக்கம் காலி முகத்திடல் வரை 04 சந்துகளைக் கொண்ட 5.3 கி.மீ நீளமான மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலையை நிர்மானிப்பதற்காகும். பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய ஒருங்கினைவு என்பவற்றில் சாதகமான விளைவினை வைத்திருத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குவதனை வகுத்தல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமன நிலையத்திற்கான போக்குவரத்து நேரத்தினைகுறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து ஏனைய பிராந்தியங்களிற்கான லாஜிஸ்டிக் போக்குவரத்தின் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன சிந்திக்கப்பட்ட நன்மைகளாகும். கொழும்பு புரநகரங்களிலுள்ள போக்குவரத்து நெரிசல் கூட கொழும்பு நெடுஞ்சலையில் கொள்களன்களின் நகர்வில் குறைவினை எதிர்பர்ப்பதனூடாக எளிதாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 56,815.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 47,346 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 9,469.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் ஜிஓஎஸ்எல் இனால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. 2016 பெப்ரவரியில் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2016 மார்ச் இல் பெறப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2025 ஜுன் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நடைமுறைப் பொறுப்புக்கள் கடல்சார் வசதி கட்டிடத்தின் ஒப்பந்ததாரரிற்கு கொடுத்து தீர்க்க வேண்டிய கொடுப்பனவுகள் மீதான மேலதிக ஏற்பாடு காரணமாக ரூபா 94 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது | 94 | ஏற்றுக்கொண்டனர். வேறுபாடானது 2022 நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும். | கணக்கீட்டு காலப்பகுதி முடிவில் உள்ளவாறான சரியான பொறுப்புக்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 820,194 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணம் செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 0.82 | ஏற்றுக்கொண்டனர். கூட்டுமொத்தம் ரூபா 695,780 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் முறையாக வெளிப்படுத்தப்படடிருக்கவில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.02 உடன் இணங்கவேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (அ) துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை இன் நிர்மான வேலைகள் | 26.3 | 23 | உண்மையான செயலாற்றல் திட்டமிட்ட செயலாற்றலிற்கு பின்னாக காணப்பட்டது. | ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் நாட்டின் கோவிட் 19 நிலைமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) ரூபா 38,605 மில்லியன் பெறுமதியான 7 நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. | 2019 இற்கும் 2021 இற்கும் இடையே ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டது. 2-24 மாதங்களால் தாமதம். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதத்தடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | குறிப்பிடப்படவில்லை. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

ஏற்றுக்கொண்டனர் 2021 திசெம்பர் முடிவிலான பிஏஈஎச் இன் செயலாற்றல் 23.3% ஆகும் உருப்படி 3 தவிர்ந்த 1-6 வரையான உருப்படி மற்றும் 13 உருப்படி என்பன 2-24 மாதங்களினால் தாமதமடைந்திருந்தது.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்**

ஒப்பந்ததாரரின் வளங்களினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிர்மான தாமதங்கள் காரணமாக ஏற்படக்கூடிய மேலதிக கிரயங்களை குறைக்க இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மொத்த வடிவமைப்புக்களின் எண்ணிக்கை 20221 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 918 ஆக இருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட வடிவமைப்புக்களின் எண்ணிக்கையில் 31 சதவீதத்தினை பிரதிநிதித்துப்படுத்தும் 285 வடிவமைப்புக்கள் 2021 திசெம்பர் முடிவினில் கூட ஒப்பந்ததாரரினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், உயர்மட்ட பீம் வடிவமைப்புக்கள் மற்றும் தளவடிவமைப்புக்கள் என்பவற்றின் பூர்த்தியாக்கல் மிகவும் மந்தகதியாக காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட செயலாற்றல் முறையே 14 சதவீதம் மற்றும் 23 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரின் நிகழ்ச்சித்திட்ட திருத்தம் 4 இன் பிரகாரம், 2021 முடிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வடிவமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 918 ஆகும் அதன்படி, திட்டமிட்ட எண்ணிக்கையில் 31% இனை பிரதிநிதித்துவப்படுத்தும் 285 வடிவமைப்புக்கள் 2021 திசெம்பர் முடிவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. உயர்மட்ட வீம் வடிவமைப்புக்கள் மற்றும் தளவடிவமைப்புக்கள் செயலாற்றல் முறையே 14 % மற்றும் 23 % ஆகும். | இலக்கிடப்பட்ட திகதிகளில் நிர்மான நடவடிக்கைகளை பூர்ததிசெய்ய நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் வடிவமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்ததாரரின் வடிவமைப்பு வேலைகள் நிர்மான வேலைகள் மற்றும் அதன் பூர்த்தியாக்கல் திகதிகளினை பிரதானமாக பாதிக்கின்றது. இருப்பினும், ஒப்பந்ததாரரின் வடிவமைப்பு வேலைகள் வடிவமைப்பு மாற்றங்களை செய்வதற்கு ஒப்பந்ததாாரின் தகுதியான தளஆளனியினரின் குறைபாடு, நெடுஞ்சாலை வடிவமைப்பு குழு ஹாங்ஹாங் இலிருந்து வேலை செய்வதுடன் தளநிலமைகள் மற்றும் விதிக்கத்தக்க நியமங்கள் என்பவற்றின் அடிப்படையிலான எவ்வித வடிவமைப்ப மாற்றங்களிலும் அவர்கள் கலந்து கொள்ளாமை மற்றும் விதிமுறைகள் ஒபபந்ததாரரியால் பயன்படுத்தப்படாமை போன்ற பல்வேறு காரணங்களினால் பொறியியலாளரினால் திருப்திப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் மற்றும் வடிவமைப்புக்களின் ஆரம்பகட்ட சமர்ப்பிப்பின் தரம் என்பவற்றின் மீதான இலங்கையிலுள்ள ஒப்பந்ததாரரின் கோட்பாட்டு வடிவமைப்பு குழுவின் கலந்துகொள்ளாமையில் ஓர் பாதிப்பினை ஏற்படுத்துகின்றமை உண்மையான ஒன்றாகும். இது சமர்ப்பிப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வடிவமைப்புக்களிற்கான ஒட்டுமொத்த நேர தேவைப்பாடு என்பவற்றை அதிகரிக்கின்றது. | ஆலோசகர் பொறியியலாளருடன் கலந்துரையாட வேண்டியதுடன் இலக்கிடப்பட்ட திகதிகளில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூரத்திசெய்ய ஒப்பந்ததாரரின் வேலைகள் மீது நெருங்கிய கண்கானிப்பும் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 19,393 மில்லியன் தெபகையான ஒதுக்கீடு பிஐஈஎச் இன் வெளிநாட்டு கடன் பயன்படுத்தலிற்காக 2021 இல் பொதுத்திறைசேறியினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 77 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தம் ரூபா 14,891 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் வேலைகள் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 73 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 4,302 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கூறிய காரணத்தின் காரணமாக முன்னைய ஆண்டிற்காக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொண்டனர் நாட்டின் கோவிட் 19 பரவல் நிலைமை மற்றும் தளத்தின் மீதான எதிர்பாராத பொதுப்பயன்பாடுகள் போன்ற காரணமாக ஒப்பந்ததாரரின் செயலாற்றல் செயற்திட்டத்தின் ஆரம்ப காரப்பகுதியிலேயே பாரியளவு தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. இதுவே ஒதுக்கீடுகளின் குறைவான பயன்படுத்தலிற்கான பிரதான காரணமாக இருந்தது. | காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடன் வசதிகளினையும் பயன்படுத்த நிதித்திட்டத்திற்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | ஆபத்து மட்டம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 30 ஆளனியினர்கள் பொது திறைசேரியின் முகாமைத்து சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்ததும், செயற்திட்ட அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் 10 உறுப்பினர்களையே உள்ளடக்கியிருந்தது. 01 பிரதி செயற்திட்ட பணிப்பாளர், 01 பிரதான பொறுலியலாளர், 02 மூத்த பொறியியலாளர்கள், 01 செயற்திட்ட கணக்காளர் மற்றும் 01 செயற்திட்ட செயலாளர், 3 முகாமைத்துவ உதவியாளர்கள் மேலும் பல போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்களாக 20 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாக காணப்பட்டது. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களிடையே அதிகாரம் மற்றும் பொறுப்புக்களின் ஒப்படைப்பு மற்றும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீது சரியான உள்ளகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல் என்பனவற்றை பாதகமாக பாதித்திருந்தது. | இடைநிலை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீது முறையான உள்ளக கட்டுபாட்டை முன்னெடுப்பது சாத்தியமற்றதாகும். | 30 பதவியினர் திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தும், ஆட்சேர்ப்பதில் தாமதம் காரணமாக, அனைத்து உத்தியோகத்தர் பதவிகளும் 2020 இல் தேவையற்றதாகும். | செயற்திட்டத்தின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |